MADURAI BENCH OF MADRAS HIGH COURT, TRICHY



**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>OS No.19/2015</u>**

<u>முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.வசந்தி | தந்தை பெயர் | : | திரு.(லேட்).ராமமூர்த்தி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 06.02.2026

**D.W. : 1**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்? |
| **பதில்** | 6–ம் வகுப்பு. |
| **கேள்வி** | வழக்கு சங்கதிகள் பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியுமா? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்? |
| **பதில்** | இடம் வேண்டும் என்று கேட்டுள்ளார். |
| **கேள்வி** | வழக்குக்கு எதிர்உரை தாக்கல் செய்த சங்கதிகள் சொன்னது நீங்கள்தானா? |

YADU COURT, CHARY

| | |
|---|---|
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | வாதி முன்பு தாக்கல் செய்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என உங்களுக்கு தெரியுமா? |
| **பதில்** | தெரியும். |
| **கேள்வி** | வாதி இதற்கு முன்பு என்ன வழக்கு தாக்கல் செய்தார்? அதன் சொத்தின் சர்வே எண் என்ன? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் கிரையம் வாங்கியதாக சொல்லும் சொத்தின் மொத்தம் விஸ்தீரனம் மற்றும் சர்வே எண் என்ன? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் கிரையம் வாங்கியதாக சொத்தினை எப்பொழுது எந்த தேதியில் வாங்கினீர்கள்? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | உங்கள் கணவர் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்தினை யார் கிரையம் கொடுத்தார்? |
| **பதில்** | மார்கிரேட் சார்லஸ். |
| **கேள்வி** | ஓ.எஸ்.எண்.1245/1987 என்ற வழக்கை இரண்டாவது கூடுதல் முன்சிப் நீதிமன்றத்தில் இருந்த வழக்கில் உங்கள் கணவர் தாக்கல் செய்த எதிருரையை இந்த வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்கள் கணவர் கிரையம் பெற்ற சொத்தின் அசல் ஆவணம் உங்கள் வசம் உள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். அதை நான் இந்நீதிமன்றத்தில் இன்று வரை தாக்கல் செய்யவில்லை. |
| **கேள்வி** | அதன் சான்றிட்ட பத்திர நகல் தான் இது என்றால்? |
| **பதில்** | சரிதான். அது **பி.வா.த.சா.ஆ.9** ஆகும். |
| **கேள்வி** | அந்த பி.வா.த.சா.ஆ.9–ல் உள்ள வாசகங்கள் பற்றி உங்களுக்கு தெரியுமா? |
| **பதில்** | நான் அதை படிக்கவில்லை. |
| **கேள்வி** | பி.வா.த.சா.ஆ.9 ஆவணம் வாங்கும் பொழுது அந்த சொத்து எப்படி இருந்தது? |
| **பதில்** | இடமாக இருந்தது. |

| | |
|---|---|
| **கேள்வி** | அந்த பிளாட்டின் எண் பி.வா.த.சா.ஆ.9–ல் குறிப்பிடவில்லை என்றால்? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | வீட்டு மனையாக பிரிக்கப்பட்டதற்கு ஒரு லேஅவுட் பற்றி உங்களுக்கு தெரியுமா? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | உங்கள் கணவர் கிரையம் பெற்ற சொத்துக்குண்டான சர்வே ஸ்கெட்ச்–யை தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | கேட்டால் தாக்கல் செய்ய முடியும். |
| **கேள்வி** | அந்த சர்வே வரைபடத்தை உங்களால் படித்தால் விவரம் தெரியுமா? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | ஆக உங்களுக்கு இந்த வழக்கு சொத்தின் விவரமே தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்கள் கணவருக்கு கிரையம் பெறும் பொழுது கிரையம் கொடுத்தவர்கள் எந்த மூல ஆவணம் கொடுத்தார்கள்? |
| **பதில்** | என் கணவருக்கு தான் தெரியும். என்னிடம் எதுவும் சொல்லவில்லை. |
| **கேள்வி** | அந்த சங்கதிகளை உங்கள் கணவரிடம் நீங்கள் கேட்டு தெரிந்து கொண்டீர்களா? |
| **பதில்** | கேட்கவில்லை. |
| **கேள்வி** | பி.வா.த.சா.ஆ.9 கிரைய பத்திரத்திலேயே உங்கள் கணவருக்கு கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்தை பொறுத்து எந்த மூல ஆவணம் என்று அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | எனக்கு தெரியாது. |

வாதி தரப்பு கேட்டு கொண்டதற்கிணங்க **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக** ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 06.02.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 06.02.2026

IIADJ COURT TRICHY

II ADJ COURT, TRICHY